

# தமிழ் அமெரிக்கர்களிடையே தமிழ் மொழி

(Published in the newsletter of the Delaware Tamil Schools)

வாசு அரங்கநாதன்

விரிவுரையாளர், தெற்காசியத் துறை, பென்சில்வேனியாப் பல்கலைக் கழகம்

தமிழர்கள் பலர் அளவிலா மகிழ்ச்சியோடு அமெரிக்கர்களாக ஆன அதே நேரத்தில் அவர்களின் மனதுக்கினிய தமிழைத் தங்களின் வம்சாவளியினருக்குக் கொடுக்க இயலுமா? எவ்வளவு கொடுக்க இயலும்? எது வரை கொடுக்க இயலும் என்று தொடர்ந்து வினவி வருகின்றனர். தமிழ்ப் பள்ளிகள் பல நடத்தியும் தமிழ் நிகழ்ச்சிகள் பல நடத்தியும் தமிழ்ப் பண்பாட்டையும் தமிழ் மொழியையும் இளைய தலைமுறையினரிடையே தக்கவைக்கப் பலரும் அயராது உழைத்து வருகின்றனர். அவர்களின் முயற்சியை நாம் பாராட்டவேண்டும். அவர்களின் அம்முயற்சிக்கு நம்மால் இயன்ற உதவியச் செய்யவேண்டும். தமிழ் அமெரிக்கர்கள் ஒவ்வொருவரும் தமிழ்ப்பற்று கொண்டுள்ளனரா என்பது வினாவுக்குரிய ஒன்றே! நம்மில் பலர் இன்னமும் இந்நாட்டில் தங்களின் பணி மற்றும் வருவாய் ஆகியவற்றைத் தக்கவைத்துக்கொள்ளும் முயற்சியில் தத்தளித்துக்கொண்டிருக்கின்றோம். அவர்களுக்கெல்லாம் தமிழ் மொழி என்பதும்

அவர்களின் எதிர்கால சந்ததியினரிடம் தமிழ் மொழி அறிவைப் புகட்டுவது என்பதும் இரண்டாம் பட்சமாகவே இருந்து வருகிறது. இன்னும் சிலரோ தங்கள் குழந்தைகள் இந்நாட்டில் மருத்துவராக ஆகவேண்டும்; பொறியியல் வல்லுனராக ஆகவேண்டும்; சிறந்த அறிவியல் வல்லுனராக ஆகவேண்டும் என்றெல்லாம் கனவு கண்டு அத்தகைய வெற்றியைத் தங்கள் குழந்தைகள் பெற அயராது உழைக்கின்றனர். அவர்களுக்குத் தமிழ் மொழி என்பது இரண்டாம் பட்சமாகவே இருந்து வரும். நாம் அமெரிக்க மண்ணில் பார்க்கும் தமிழர் ஒவ்வொருவரும் அவர்களுடைய சந்ததியினர் ஒவ்வொருவரும் தமிழைச் சரளமாகப் பேசவேண்டும். தமிழ் இலக்கியங்கள் பற்றிய நல்லறிவு அவர்களிடையே இருக்கவேண்டும் என்று விரும்புகிறோம். அப்படி நடந்தால் அதுவே தமிழ் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் என்று எண்ணுகிறோம்.

அமெரிக்க மண்ணில் தமிழ்ப் பள்ளிகள் பெருகிய நிலையில் தமிழ் மாணாக்கர்களின் எண்ணிக்கைப் பெருகி வரும் நிலையில் அவர்களின் தமிழறிவு அவர்களுக்கு எவ்வகையில் அவர்களின் வளர்ச்சிக்கு இம்மண்ணில் பயன்படும் என்பதை நாம் ஊர்ந்து நோக்கவேண்டும். பென்சில்வேனியாப் பல்கலைக்கழகத்தின் உலகப் புகழ்பெற்ற வார்ட்டன் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் அனைவரும் இரண்டுவருட மொழியறிவு பெறவேண்டும் எனும் கட்டாயம் இருக்கிறது. இவ்வாறே பொறியியல் மாணவர்கள் மற்றும் பல மாணவர்களுக்கும் இவ்வகைக் கட்டாயம் இருக்கிறது. இப்பள்ளிகளில் படிக்கும் தமிழ் மாணாக்கர்கள் தங்களின் தமிழறிவைப் பயன்படுத்தாமல் பிரஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ் போன்ற மொழிகளைப் படிக்கப் போகிறார்களா? இக்கேள்வியைத் தமிழ் அமெரிக்கர்கள் ஒவ்வொருவரும் கேட்டுக்கொள்ளவேண்டும். தமிழ் வகுப்புகள் தொடர்ந்து நடந்து வரும் பென்சில்வேனியாப் பலகலைக் கழகத்தில் ஆகட்டும் சிகாகோ பல்கலைக்கழகத்திலாகட்டும் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்திலாகட்டும் கலிபோர்னியா பெர்க்லிப் பலகலைக்கழகத்திலாகட்டும் டெக்ஸாஸ் ஆஸ்டின் பல்கலைக்கழகத்தில் ஆகட்டும் இங்கு படிக்கும் தமிழ் மாணவர்கள் தமிழைப் புறக்கணித்து வேறு மொழிகளைப் படிக்க நம் மனம் விடுமா? இவர்கள் இவ்வரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள தமிழ் அமெரிக்கர்களாகிய நாம் அவர்களுக்கு ஊக்கம் தெரிவிக்கவேண்டாமா?

அத்தோடு சமூகப் பள்ளிகளில் தமிழ் கற்றால் அவ்வறிவைப் பல்கலைக் கழகங்களில் தெரிவித்து அவர்கள் வேறு எந்த மொழியையும் படிக்கவேண்டாம் எனும் நிலையையும் பெறலாம். மற்ற மொழிகள் படிக்கவேண்டாம் என்று கூறவில்லை. ஆனால் கட்டாயமாக இரண்டு வருடம் ஆங்கிலம் அல்லாத ஒரு மொழியைப் படிக்கவேண்டும் என்ற ஒரு தேவை தமிழ் அமெரிக்க மாணவர்களுக்கு ஏற்படும் போது அவர்கள் ஏன் தமிழ் மொழியறிவைப் பயன்படுத்திக்கொள்ளக்கூடாது என்பதுதான் இக்கட்டுரையின் உள்நோக்கம். பென்சில்வேனியாப் பலகலைக்கழகத்தின் மொழிகள் மையத்தில் இத்தகைய மாணாக்கர்களின் தமிழறிவைக் கணித்து அவர்களுக்கு இரண்டு வருட மொழியறிவு கொண்டமைக்கான தகுதியை அவர்கள் செல்லும் கல்லூரியில் பயன்படுத்துமாறு செய்கின்றனர். இவ்வரிய வாய்ப்பை நம் தமிழ் மாணாக்கர்கள் அவர்கள் செல்லும் கல்லூரியில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். “வண்ணம் நோக்கியும் மென் மொழி கூறியும் நம்மொடு நம் மொழி நவில்வோம்”

This article is intended to encourage our second generation Tamil students to make use of their knowledge of Tamil toward their progress during their college studies. Many colleges in the US require that their students get at least two years of second language proficiency as part of their undergraduate curriculum. When any of the second generation Tamil students get a skill in Tamil literacy at community schools or from their own families, they should make it a point that their knowledge is used to waive the above requirement in the US colleges. The University of Pennsylvania’s Penn Language Center does let Non-Penn and Penn students take a proficiency test to prove their skill in any language. This will indeed save not only lots of money from their parents but would also save their precious time while attempting to major in science or other disciplines of their choice. Students who have enough proficiency in the Tamil language should make use of this opportunity for sure, so their success in colleges can be made much easier. Those who are interested in getting a proficiency certificate in Tamil may have a look at the URL: http://plc.sas.upenn.edu/languageproficiencytesting.

Let us make use of the knowledge of Tamil that we obtain from community schools toward achieving our goals at colleges in the US.  Let Tamil be part of our entire life and let it work for our success in this land as much as possible.